DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.174/22 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 6 |
| Name | திரு. பாண்டியன் |
| Father Name | வடிவேல் |
| Village | ஏரல் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 60 |

**( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 08-05-2026.(நேரம்: 01.30PM )**

**( சாட்சியம் காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பண்டாரவிளையில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் டிரைவராக வேலை செய்து வந்தேன்.
3.இவ்வழக்கில் இறந்துபோன ரவி என்ற ரவி குமாரை எனக்கு தெரியும்.
4.அசா 1 ஐ எனக்கு தெரியும்.
5.வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது,
6. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 6 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 6ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 07.09.2019 ஆம் தேதி மாலை சுமார் 04.15 மணியளவில் பெருங்குளம் டு சாயர்புரம் செல்லும் வளைவு ரோட்டின் வெல்டிங் ஓர்க்சாப் அருகில் இவ்வழக்கில் இறந்துபோன ரவிகுமார் ரோட்டின் இடதுபுறமாக TN69AV 0097 Yamaha இருசக்கர வாகனத்தை ஓட்டி செல்லும்போது அதேரோட்டின் எதிர் –திசையில் இவ்வழக்கின் எதிரி ஜெபதுரை TN69AV 7381 Tourist Van ஐ அதிவேகமாகவும், ஆஜாக்கிரதையாகவும் ஓட்டி மோதியதில் ரவி குமார் என்பவருக்கு தலை மற்றும் உடம்பில் டயர் ஏறி தலை நசுங்கியதால் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.மேற்படி சம்பவத்தை நான் கேள்விப்பட்டு மறுநாள் காலை 10.00 மணிக்கு TKMCH சவகிடங்கில் வைத்து ரவிகுமார் என்பவரின் பிரேத விசாரணையில் நான் உடன் இருந்தேன் என்றுபோலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் காணொலி மூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.